DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDL. DIST. & SESSIONS JUDGE, MADURAI

**S.C. 323/2017 P.W.18**

DEPOSITION OF WITNESS FOR: PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | முருகையா |
| FATHER'S NAME | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **23.08.2021**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>**

**(**இவ்வழக்கில் அரசு தரப்பில் கூடுதல் சாட்சியாக விசாரிக்க crmp 476/2021 மனு தாக்கல் செய்து எதிரிகள் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டும் மேற்குறிப்பு செய்யப்பட்டதன் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்டார்)

நான் தற்போது காவல் துறையில் நுண்ணறிவு பிரிவில் புகைப்பட நிபுணராக பணியாற்றி ஓய்வு பெற்று விட்டேன். தற்போது ஊமச்சிகுளத்தில் குடியிருந்து வருகிறேன். கூடல் புதூர் காவல் நிலைய குற்ற எண்.126/2017 என்ற வழக்கில் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க புகைப்படம் எடுத்து கொண்டு இருந்தேன். 28.02.2017 அன்று நான் எடுத்த இறந்து கிடந்த நபரின் புகைப்படங்கள். 02.03.2017 அன்று ஒரு கத்தி ஆகியவற்றை புகைப்படம் எடுத்தேன். 03.03.2017 அன்று ஒரு இரு சக்கர வாகனமான ஸ்கூட்டியை புகைப்படம் எடுத்தேன். மேற்படி புகைப்படம் அசாஆ 20.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் சம்பவம் நடந்த அன்று நுண்ணறிவு பிரிவில் தான் பணியாற்றினேன். நுண்ணறிவு பிரிவில் காவல் துறையில் போட்டோகிராபராக தனியாக

நியமிக்கப்படுவார்கள்., அதில் நானும் நியமிக்கப்பட்டிருந்தேன். எங்களுக்கு சம்பவ இடம் குறித்து புகைப்படம் எவ்வாறு எடுக்க வேண்டும் என்று பயிற்சி கொடுக்கப்படும் என்றால் சரிதான். 28.02.2017 தேதியன்று எங்களுக்கு தகவல் நுண்ணறிவு பிரிவில் இருந்து தான் கொடுக்கப்பட்டது. நேரடியாக தகவல் கொடுக்கப்படவில்லை. எனக்கு தகவல் கிடைக்கும் போது நான் மதுரை அழகர் கோவில் ரோட்டில் அமைந்துள்ள ஆணையர் அலுவலகத்தில் உள்ள நுண்ணறிவு பிரிவில் நான் பணியில் இருந்தேன். எனக்கு தகவல் கிடைத்து நான் சம்பவ இடம் போகும் போது கைரேகை நிருபணர்கள் என்னுடன் வந்திருந்தார்கள். மோப்ப நாய் பிரிவை சேர்ந்தவர்கள் என்னுடன் வரவில்லை , நான் அவர்களை பார்க்கவில்லை. எங்கள் அலுவலகத்தில் இருந்து சம்பவஇடம் செல்ல அரை மணி நேரம் ஆகும். சம்பவ இடத்திற்கு வரச்சொல்லி 28.02.2017 தேதி காலை 8 மணிக்கு நான் பணியில் இருந்த போது எனக்கு தகவல் கிடைத்தது, காவல் நிலையத்தில் இருந்து வரும் தகவல்களை நாங்கள் பதிவு செய்ய வேண்டும் என்றால் சரிதான். சம்பவ இடம் குறித்து புகைப்படங்களை large range, mid range, close up ஆகிய மூன்று கோணங்களில் எடுக்க வேண்டும் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் அருகில் உள்ள நிலையான பொருட்களை காட்டி சம்பவ இடம் தெரியும்படி கழுகு பார்வையில் புகைப்படம் எடுக்க வேண்டும் என்றால் சரிதான். கைரேகை எதுவும் சம்பவ இடத்தில் தென்பட்டால் அவற்றை உற்று நோக்கி படம் எடுக்க வேண்டும் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் புகைப்படம் எடுப்பதற்கு முன்பாக ஒவ்வொரு புகைப்படம் எடுப்பதற்கு முன்பு placard வைத்து எடுக்க வேண்டும் என்றால் சரிதான். அந்த placard ல் வழக்கு எண்., தேதி, சம்பவ இடம் பற்றிய விவரம், புகைப்படம் எடுத்தவரின் பெயர் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள அசாஆ 20 ஆன ஆவணத்தில் placard வைக்கப்படவில்லை என்றால் சரிதான். ஒரு சம்பவ இடத்தில் என்னென்ன பொருட்கள் காணப்பட்டதோ, மற்றும் பார்வை மகசரில் என்னென்ன பொருட்கள் குறிப்பிடப்பட்டுள்ளதோ அவற்றை புகைப்படமாக எடுக்க வேண்டும் என்றால் சரிதான். அசாஆ 20 ஆன ஆவணத்தில் முன்புற hall ல் போட்டோ எடுத்ததாக கண்டுள்ளது. அசாஆ 20 ஆன ஆவணத்தில் முன்புற hall ல் போட்டோவில் steel கட்டில் இருந்ததாகவோ steel கட்டில் மீது 2 torino பாட்டில் இருந்ததாக காட்டப்படவில்லை என்றால் சரிதான், அவைகள் அந்த இடத்தில்

இருந்தால் அவற்றையும் சேர்த்து புகைப்படம் எடுத்திருக்க வேண்டும் என்றால் சரிதான், நான் எடுத்த புகைப்படத்தில் சமையலறை இருப்பதாகவோ சமையலறையில் 2 ஸ்டீல் பீரோ இருந்ததாக சம்பவ இடத்தில் காணப்படவில்லை என்றால் சரிதான். இறந்த நபரை போட்டோ எடுத்த போடு அவருக்கு கீழ் ஒரு போர்வை விரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு பாத்ரூமுக்கும் டாய்லெட்டும் வித்தியாசம் தெரியும். சம்பவ இடத்தில் பாத்ரூம் எதுவும் இருந்ததாக புகைப்படம் எடுக்கவில்லை. அசாஆ 20 ல் கத்தியை போட்டோ எடுத்த போது அதற்கு கீழே ஒரு பிளேட்–ன் மீது வைத்து எடுக்கப்பட்டது என்றால் சரிதான், அந்த பிளேட் சம்பவ இடத்தில் இருந்தது. அந்த கத்தி இருந்த புகைப்படத்தை பார்த்து அது எந்த இடத்தில் எடுக்கப்பட்டது என்பதை சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியாது., வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் சம்பவம் முடிந்து 4 நாட்கள் கழித்து என்னை விசாரித்தார். நான் எடுத்த அசாஆ 20 ஆன புகைப்படத்தை தனியார் போட்டோ லேப்பில் வைத்து பிரிண்ட் செய்யப்பட்டது. நான் புகைப்படம் எடுத்தது digital camera என்றால் சரிதான். digital camera வில் புகைப்படம் எடுக்கும் போது அது எந்த நேரத்தில் எந்த தேதியில் எடுக்கப்பட்டது என்ற விவரம் அதில் காட்டப்படும் என்றால் சரிதான்., digital camera வில் எடுக்கப்படும் புகைப்படும் chip ல் தான் save ஆகும். ஆய்வாளர் என்னை விசாரணை செய்யும் போது மேற்படி chip யை வாங்கி பார்த்தாரா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் இரு சக்கர வாகனத்தின் புகைப்படம் நீதிமன்ற வளாகத்தில் எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 1வது எதிரியின் வீடு காவல் நிலையத்தில் அரை கிமீ இடைவெளி இருக்கும். அது எந்த திசையில் உள்ளது என்று எனக்கு தெரியாது, இரு சக்கர வாகனத்தின் புகைப்படத்தில் 1ம் எதிரி வீடு இருந்ததாக காட்டப்படவில்லை என்றால் சரிதான். சிமிண்ட் தரை மற்றும் கிரைண்டருக்கு அருகில் ரத்த கறை இருந்தால் அவற்றை புகைப்படம் எடுக்க வேண்டும் என்றால் சரிதான். சிமிண்ட் தரை மற்றும் கிரைண்டருக்கு அருகில் ரத்த கறை இருந்தால் நான் புகைப்படம் எடுத்திருப்பேன் என்றால் சரிதான். அசாஆ 20 ஆன பிரிண்ட் எடுத்தற்கான ரசீதுகள் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகைப்படம் எடுக்கவில்லை என்றாலும் நான் சம்பவ இடத்தில் சென்று புகைப்படம் எடுக்கவில்லை என்றாலும் இவ்வழக்கில் புகைப்படம் எடுப்பதற்கு சாட்சி வேண்டும் என்பதற்காக என்னை கூடுதல் சாட்சியாக அரசு தரப்பில்

விசாரணை செய்ததில் நான் அரசிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல். நான் சம்பவத்தை பற்றி கேள்விப்பட்டு அரை மணி நேரத்தில் சம்பவ இடம் சென்றுவிட்டேன் என்றால் சரிதான்.